## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No.277/2020

| | | |
|---|---|---|
| பிரதிவாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சுரேஷ் |
| தகப்பனார் / கணவர் | .. | தண்டபாணி |
| வயது | .. | 30 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | விளாரிப்பட்டு |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாள் திங்கள்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் கடந்த சுமார் 13 வருடங்களாக வசித்து வருகிறேன். என் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையில் முகவரி விளாரிப்பட்டு, செய்யாறு என்று தான் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 76 ஆகும். அதன் மொத்த விஸ்தீரனம் என்ன என்றால் 40 செண்ட். மேற்படி சொத்தை வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மரபு வழி பட்டியல் தாக்கல் செய்துள்ளேன், அதில் படியப்ப முதலியார், சடகோபன், முனியன் என்கிற முனியப்பன் ஆகியோர்கள் சகோதரர்கள் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி மூன்று நபர்களின் தந்தை பெயர் தெரியாது என்றால் தெரியாது. படியப்ப முதலியாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 நபர்கள், ஆறுமுகம் என்கிற சின்ன பையன் மற்றும் கோவிந்தசாமி ஆவர். சடகோபன் என்பவருக்கு 2 பிள்ளைகள், கந்தசாமி மற்றும் சுப்பிரமணி ஆவர். முனியன் என்கிற முனியப்பன் என்பவருக்கும் இரண்டு பிள்ளைகள், குப்புசாமி மற்றும் துரைசாமி ஆவர். மேற்படி நபர்களுக்கு வாரிசு என்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் அது நான்கு தலைமுறை ஆகிவிட்டது. படியப்ப முதலியார், சடகோபன் மற்றும் முனியன் என்கிற முனியப்பன் ஆகியோர்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நாங்கள் கிரயம்

வாங்கிய ஆவணங்கள் உள்ளது. எனது பதிலுரையில் தாவா சர்வே எண்.76ல் 40 செண்ட், இடமானது படியப்ப முதலியாருக்கு தென்பாதி 20 செண்டும், வட பாதி 20 செண்டில் முனியப்பன் என்கிற முனியனுக்கு 10 செண்டும், சடகோபனுக்கு 10 செண்டும் பாகமாக அடைந்து அனுபவித்தனர் என்ற சங்கதி தவறு என்றால் சரியல்ல. படியப்ப முதலியாரின் தென்பாதி 20 செண்டுக்கு எந்த ஆட்சேபனையும் எனக்கு இல்லை என்று சொன்னால் சரிதான். எனது தரப்பில் பி.சா.ஆ.1 07.02.1927 தேதியிட்ட தாவா சொத்து 5 செண்ட் குறித்து ஏற்பட்ட கிரைய ஆவணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.2 முதல் 4 வரையிலான ஆவணங்களும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. பதிவு செய்யப்படாத பி.சா.ஆ.5 ஆவணம் முற்றிலும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 40 செண்டும் கோவிந்தசாமி மற்றும் ஆறுமுகம் தான் அனுபவித்து வந்தனர் என்றால் சரியல்ல. அவர்களின் தகப்பனார் படியப்ப முதலியார் அவர் காலாந்திரம் வரையில் அவர் மட்டுமே அனுபவித்து வந்தார் வேறு யாரும் அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தாவா சொத்தின் பட்டா கோவிந்தசாமி மற்றும் ஆறுமுகம் பெயரில் தான் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து கோவிந்தசாமி மற்றும் ஆறுமுகம் பாத்தியப்பட்டது என்றும், ஆறுமுகத்திற்கு வந்த 20 செண்ட் பாகத்தை கோவிந்தசாமி கிரையம் பெற்றார் என்றாலும் சரியல்ல. மேற்படி மொத்த 40 செண்டும் வாதிகள் தான் தற்போது அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. UDR க்கு முன்பே 1ம் பிரதிவாதி கன்னியம்மாள் பெயருக்கு பட்டா மாற்றம் அடைந்தது என்றால் சரிதான். கன்னியம்மாள் பெயருக்கு பட்டா மாற்றம் அடைந்த பின்னர் வாதிகள் முறையிட்டதன் பின்னர் அவர் பெயரில் இருந்த பட்டா வேறு பெயருக்கு மாற்றம் அடைந்தது என்று சொன்னால் சரிதான், ஆனால் தவறுதலாக மாறிவிட்டது. நானாகவே 1ம் பிரதிவாதி கன்னியம்மாளிடம் ஒரு வாக்குமூலம் பெற்று அதில் பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாற்றம் செய்வது சம்பந்தமாக ஆட்சேபனை இல்லை என்று கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கன்னியம்மாளிடம் தாவா சொத்து தனக்கு சொத்தமானது இல்லை என்று தான் சொல்லமுடியும் என்றும், பட்டாவை பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. கன்னியம்மாள் அந்த இடத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை, மேலும் அந்த இடத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னார். கன்னியம்மாள் பெயருக்கு பட்டா தவறுதலாக

மாறிவிட்டது என்றும், 2 முதல் 5 வரையிலான வாதிகளின் தகப்பனார் பெயர் தான் கோவிந்தசாமி என்று சொன்னால் சரியல்ல. கன்னியம்மாள் கணவர் பெயர் கோவிந்தசாமி என்ற விவரத்தை நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி தாவா சொத்து 40 செண்டும் வாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேலும் பிரதிவாதிகள் கோரியுள்ள எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றும், நாங்கள் எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவித்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**